வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு

முதலாம் தவணைப்பரீட்சை - 2020

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	**தரம் : 11**

முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக

1)

i. வவுனியாவிலுள்ள வானிலை மையம் ஒரு மாதத்திற்கு தினசரி மழை மதிப்புகளைப் பதிவு செய்கின்றது.மேற்குறிப்பிட்ட மழைவீழ்ச்சித் தரவைச் செயன்முறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்களுக்கு 2 உதாரணங்கள் தருக??

ii. பதினறுமஎண் E9 ற்குச் சமவலுவான எண்ம எண்ணைத் தருக?

iii. பஸ்கல் மொழியில் இலக்கங்களை வகை குறிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய தரவு வகைகள் (data types) 02 தருக?

iv. புள்ளி அமைவுரு அச்சுப்பொறிக்கும்(dot-matrix printer) லேசர் அச்சுப்பொறிக்கும் (laser printer) இடையிலான வேறுபாடுகள் 02 தருக?

v. முறைமை மென்பொருள் (system software) பிரயோக மென்பொருளுக்கு (application software) உதாரணங்கள் 02 வீதம் எழுதுக?

vi. சாதரண தபாலை விட மின்னஞ்சல் (E-mail) மூலம் கிடைக்கும் நன்மைகள் 02 தருக?

vii. அளவிற்கேற்ப (size) கணணியை வகைப்படுத்தும் 04 வகைகளையும் தருக?

viii. பின்வரும் கூற்றுக்களை கருத்திற் கொள்ளுக.
நெறிமுறையை உரு வடிவத்தில் படிமுறையாக காட்டுதல் 1. .....
நெறிமுறையை ஒரு மொழியை பயன்படுத்தி எழுத்துருவாக காட்டல் 2.....
பொருத்தமான சொற்களை கொண்டு மேலுள்ள இடைவெளிகளை நிரப்புக.
(போலிக்குறிமுறை pseudo code / பாய்ச்சற் கோட்டுப்படம் flowchart)

ix. அட்டவணை A,B யை உமது விடைத்தாளில் பிரதி செய்து அம்புக்குறி மூலம் இணைக்குக.

A	B
தொகுப்பி	மொழிபெயர்க்கப்பட்டதன் பின்னரான செய்நிரல்
இலக்கு நிரல் (Object programme)	செய்நிரலின் கூற்றுக்களை ஒன்றன் பின் ஒன்றாக மொழிபெயர்த்தல்
வரி மொழிமாற்றி	மொழிபெயர்ப்பிற்கு பயன்படுத்தக்கூடிய அடிப்படை செய்நிரல்
மூல நிரல (Source programme)	செய்நிரலை ஒரே தடவையில் இயந்திர மொழியாக மாற்றல்

X. பின்வரும் நிரை 1 நிரை 2 அவதானிக்குக .

நிரை 01	நிரை 02
A	ஒரு உள்ளீட்டு கருவியாகும்
B	உலகிலேயே அதி உயர்ஆற்றலும் அதி வேகமானதுமான கணணி
C	கணணியின் அனைத்து செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தக்கூடியது
D	ஒத்திசை சைகைகளாலும் இலக்கமுறை செய்கைகளாலும் இயங்க கூடிய கணணி

A,B,C,D க்கு பொருத்தமான விடையை தெரிவு செய்து எழுதுக
(மீக்கணணி இயக்குபிடி(Joystick) கட்டுப்பாட்டலகு, கலப்பினக்கணணி(Hybrid computer))

(10 * 2 புள்ளிகள் = 20புள்ளிகள்)

www.kedu.lk

2) சாரதா கைமுறை தகவல் முறையை பயன்படுத்தி வியாபாரம் நடாத்தும் ஒரு வியாபாரி.அவர் தனது வியாபாரத்திற்காக இணைய இணைப்புள்ள கணணியை அடிப்படையாக கொண்ட கணணி தகவல் முறையை பயன்படுத்த தீர்மானித்தார்"

i. கைமுறை தகவல் முறையோடு ஒப்பிடுமிடத்து கணணித் தகவல் முறையை பயன்படுத்துவதால் அவருக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக?

ii. புதிய முறைமையின் தேவைகளை இனம்காண தகவலை சேகரிக்க பயன்படுத்தப்படும் வழிகள் இரண்டு தருக?"

iii. தரவு முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தக்கூடிய மென்பொருள் ஒன்று தருக?

iv. தகவல் முறையை இணையத்திற்கு இணைப்பதன் மூலம் அவர் பெறும் அனுகூலங்களை விபரிக்குக?

v. வியாபார நிறுவனத்தின் ஊழியர்கள் புதிய முறைமையை முதலாவதாக பயன்படுத்தும் படிமுறை முறைமை விருத்தி வாழ்கை ஆயுள் வட்டத்தின் எப்படிமுறையில் எச்சந்தர்ப்பத்திலாகும்?

(5 * 2 புள்ளிகள் = 10 புள்ளிகள்)

3) ஒருவர் தனது பணத்தை மன்னார் NSB வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.அவர் அப்பணத்தை வவுனியாவிலுள்ள NSB வங்கி கிளையில் மீளப்பெற விரும்பினார்.

1. இங்கு பயன்படுத்தப்படும் வலையமைப்பு வகை எது?
2. கணணி வலையமைப்பொன்றை அதன் பௌதிக கட்டமைப்பு (physical layout) அடிப்படையில் வகைப்படுத்துக?.
3. இடத்துரிப்பரப்பு வலையமைப்பு (LAN) பெரும்பரப்பு வலையமைப்பிற்குமிடையிலான (WAN) வேறுபாட்டை விளக்குக.
4. கணணி வலையமைப்பின் நன்மைகள் 02 , தீமைகள் 02 தருக?
5. தரவு ஊடுகடத்தும் ஊடகங்கள் 02 யும் தருக?

(5 * 2 புள்ளிகள் = 10 புள்ளிகள்)

4) பின்வரும் விரிதாளை அடிப்படையாக கொண்டு விடை எழுதுக.

	A	B	C	D	E	F
1	Item	Unit cost (Rs)	Quantity	Total cost (Rs)	Discount	Final cost (Rs)
2	CD	Rs30.00	10	Rs300.00	5%	Rs285.00
3	DVD	Rs50.00	8	Rs400.00		Rs380.00
4	Pen Drive	Rs1,500.00	5	Rs7,500.00		Rs7,125.00
5					Total	Rs7,790.00
6						

1. பொருட்களையும் அதன் விலைகளையும் காட்டுவதற்கு பொருத்தமான வரைபு வகை எது?
2. இறுதி விலையை கணிப்பதற்கு F2 சிற்றரையில் (cell)எழுத வேண்டிய சூத்திரம் யாது?
3. F2 சிற்றரையில் உள்ள சூத்திரத்தை F3 சிற்றரையில் எவ்வாறு பிரதி செய்யலாம்?
4. F5 ல் மொத்த தொகையை (total) கணிப்பதற்கான சூத்திரத்தை எழுதுக?
5. விரிதாள் மென்பொருட்கள் இரண்டு தருக?

(5 * 2 புள்ளிகள் = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

5)

A)கீழ்வரும் பஸ்கால் செய்நிரலின் வெளியீட்டைத் தருக.

```
Var num:array[0..4]of  integer;
Begin
Num[0]:=15;
Num[2]:=18;
Num[4]:=50;
Num[1]:= Num[4]+10;
Num[3]:= Num[0]+ Num[2]
For i=1 to4 do
Write(num[i]);
End.
```

B) கீழே தரப்பட்டுள்ள போலிக்குறிமுறைக்கான பாய்ச்சற்கோட்டுப் படத்தினை வரைக.

```
Begin
Value=A[0]
K=1
Value =[k<=4)
        If A[k]<value Then
                Value=A[k]
        Endif
        K=k+1
Endwhile
        Display value
End.
```

c) மேற்தரப்பட்ட போலிக்குறிமுறையின் வெளியீடு யாது?

(3+4+3 = 10 புள்ளிகள்)

6)

1) 1 தொடக்கம் 10 வரையுள்ள இலக்கங்களை அச்சிடுவதற்கான பாய்ச்சற்கோட்டுப் படத்தை வரைக?
2) வரிமொழிமாற்றி, தொகுப்பி ஆகியவற்றை வேறுபடுத்துக?
3) உயர் மட்டக் கணினி மொழியில் எழுதப்பட்ட செய்நிரல்களின் பண்புகள் யாவை?
4) 3 எண்களின் கூட்டுத்தொகையையும் சராரியையும் காண்பதற்கான பஸ்கால் செய்நிரலை எழுதுக?

(4 *2.5 புள்ளிகள் = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk